மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 95/2020

பெயர் : நிர்மலாதேவி
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 06.11.2025

---

**குறுக்கு விசாரணை (2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு)**

1. கோவிந்தசாமி எந்த தேதியில் இறந்தார் என்றால் 18.06.2020 தேதியில் காலமானார். கோவிந்தசாமியின் மனைவி பருவதம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனது திருமணம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 11/4/1980 தேதியில் நடைபெற்றது. திருமணம் தொடர்பான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எங்களுக்கு திருமணத்திற்கு முன்பாக பருவதம்மாள் உடல்நிலை சரியில்லாமல், மனநிலை சரியில்லாமலும் இருந்தார் என்பதை காண்பிப்பதற்கான மருத்துவ ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. பருவதம்மாளை சட்டப்படி விவாகரத்து செய்த பின்னர் தான் என்னை கோவிந்தசாமி திருமணம் செய்து கொண்டாரா என்றால் இல்லை. பருவதம்மாள் 2018 ஆம் ஆண்டு வரை உயிருடன் இருந்துள்ள போது அவரை விவாகரத்து செய்யாமல் என்னை கோவிந்தசாமி இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளது சட்டப்படி செல்லாது என்றும், எனவே நான் கோவிந்தசாமியின் சட்டப்படியான வாரிசாக வரமாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.06 18:45:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.